

திருவள்ளூர் மாவட்டம், காக்களூர் தொழிற்பேட்டையில் நடைபெற்று வரும் பல்வேறு பணிகள் மற்றும் தொழில் நிறுவனங்களின் செயல்பாடுகளை சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ. அன்பரசன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் துறை அரசு செயலாளர் வி.அருண் ராய், தொழில் வணிக ஆணையர் சிஜி. தாமஸ் வைதயன்,சிட்கோ மேலாண்மை இயக்குநர் எஸ்.மதுமதி, மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் ஆல்பி ஜான் வர்கீஸ், பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் கே.வி.ஜி. உமா மகேஸ்வரி, தொழில் வணிக கூடுதல் இயக்குநர் ஏகாம்பரம். கண்காணிப்பு பொறியாளர் எம்.ஆர். சோமசுந்தரம், மாவட்ட தொழில் மையம் பொது மேலாளர் சேகர் திருவள்ளூர் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் ஜெயசீலி ஜெயபாலன், ஒன்றிய செயலாளர் ஆர்.ஜெயசீலன், பொதுகுழு உறுப்பினர் த.எத்திராஜ் உள்ளாட்சி. பிரதிநிதிகள், தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்

## திரு.வி.க. நகர் தெற்குப் பகுதி 76(அ) வட்ட செயல்வீரர்கள் கூட்டம்

சென்னை, மே 19 -

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆலோசனைப்படி திரு.வி.க நகர் தெற்கு பகுதி 76(அ) வட்ட கழக செயல்வீரர்கள் கூட்டம் இன்று (19.05.2023 வெள்ளிக்கிழமை) மாலை 5:00 மணியளவில் எஸ்.கே. மகால், ஹாஜிமுகமது அப்பாஸ் சாகிப் தெரு (பருக் ஒட்டல் எதிரில்) பட்டாளத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு வட்ட துணைச் செயலாளர் ம. வெற்றிவேல் தலைமையேற்கிறார். இக் கூட்டத்தில் ப. தாயகம்கவி எம்.எல்.ஏ., தொகுதி பார்வையாளர் மு. தம்பிதுரை, பகுதி செயலாளர் எம். சாமிகண்ணு, எஸ். தமிழ்செல்வி சசிகுமார் எம். சி. ஆகியோர் புதிய உறுப்பினர்கள் சேர்த்தல் மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசனை வழங்குகிறார்கள்.

இந்நிகழ்ச்சியில் 76(அ) வட்டத்திற்கு உட்பட்ட மாவட்டகழக, பகுதிகழக நிர்வாகிகள், மாவட்டபிரதிநிதிகள், வட்டகழக நிர்வாகிகள், மற்றும் அணிகளின் நிர்வாகிகள், பாகமுகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள், களப்பணியாளர்கள், கழக முன்னோடிகள், கழக செயல் வீரர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு 76(அ) வட்ட செயலாளர் எஸ். வெங்கடேசன் கேட்டுக் கொண்டுள்ளார்.

### "திருக்கோயில்" செயலி மற்றும்

# பிரசாதங்களை பக்தர்களின் இல்லங்களுக்கு அனுப்பி வைக்கும் திட்டம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்

சென்னை, மே 19 -

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (18.05.2023) ஆணையர் அலுவலகத்தில் இந்து சமய அறநிலையத்துறை நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களின் தகவல்கள் மற்றும் சேவைகளை எளிதில் அறிந்து பயன்படுத்திக் கொள்ளும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள "திருக்கோயில்" எனும் கைபேசி செயலியையும், 48 முதுநிலை திருக்கோயில்களின் பிரசாதங்களை பக்தர்களின் இல்லங்களுக்கு ஒன்றிய அரசின் அஞ்சல் துறையுடன் இணைத்து அனுப்பி வைக்கும் திட்டத்தினையும் தொடங்கி வைத்தார்.

இதில், அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல் வழிகாட்டுதலின்படி வளர்ந்து வரும் நாகரிகம் மற்றும் தொழில் நுட்பத்திற்கேற்ப இந்து சமய அறநிலையத்துறையும் பல்வேறு மாறுதல்களை துறையில் மேற்கொண்டு வருவதை பொதுமக்களும் ஊடகத்துறையினரும் நன்கு அறிவீர்கள். அதில் ஒரு மைல் கல்லாக திருக்கோயில்களின் தகவல்கள் மற்றும் சேவைகளை பக்தர்கள் எளிதில் அறிந்து கொண்டு பயன்படுத்திட ஏதுவாக திருக்கோயில் எனும் கைபேசி செயலி மற்றும் திருக்கோயில் பிரசாதங்களை பக்தர்கள் இல்லங்களுக்கு அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கும் திட்டத்தினை இன்றைக்கு தொடங்கி வைத்துள்ளோம்.

இந்தச் செயலியின் மூலம் திருக்கோயில்களின் தலபுராணம், தலவரலாறு, நடை திறந்திருக்கும் நேரம், பூஜைகள், பிரார்த்தனைகள், அதற்கான கட்டண விவரங்கள், முக்கிய திருவிழாக்கள், அனைத்து கோணங்களிலும் திருக்கோயில்களை கண்டுகளிக்கும் மெய்நிகர் காணொலி, திருவிழாக்களின் நேரலை, திருக்கோயில்களை சென்றடைவதற்கான கூகுள் வழிகாட்டி, பக்தர்களுக்கான சேவைகள் போன்றவற்றை அறிந்து கொள்வதோடு, மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள் திருக்கோயில்களுக்கு செல்லுகையில் மின்கல ஊர்தி, மற்றும் சாய்தளத்தில் சக்கர நாற்காலியில் அழைத்துச் செல்வதற்கும் தரப்பட்டுள்ள தொலைபேசி எண் சேவையையும், அன்னதானம், திருப்பணி போன்ற நன்கொடைகளையும் வழங்கலாம்.

மேலும், தேவாரம், திருவாசகம், திருமுறைகள், நாலாயிர திவ்ய பிரபந்தம் போன்றவை முழுமையாக பதிவேற்றம் செய்யப்பட்டிருக்கின்றது. இதனை பக்தர்கள் கேட்டு மனநிறைவு பெறலாம். இச்செயலியில் முதற்கட்டமாக, பிரசித்தி பெற்ற 50 முதுநிலை திருக்கோயில்கள் இடம்பெற்றுள்ளன. அடுத்தகட்டமாக 88 திருக்கோயில்களை இணைக்கும் பணி நடைபெற்று வருகிறது. படிப்படியாக மற்ற திருக்கோயில்களின் விவரங்களும் இணைக்கப்படும். இச்செயலியை ஆண்ட்ராய்டு வகை கைபேசிகளுக்கு Play Storeலிருந்தும், iOS வகை கைபேசிகளுக்கு App Storeலிருந்தும் பதிவிறக்கம் செய்து நிறுவிக் கொள்ளலாம்.

இந்த கைபேசி செயலியை பயன்படுத்தும் போது ஏற்படுகின்ற குறைபாடுகளை இந்து சமய அறநிலையத்துறையின் கட்டணமில்லா தொலைபேசி எண்ணிற்கு தெரிவித்தால் அவற்றை நிவர்த்தி செய்ய ஏதுவாக இருக்கும். அந்த வகையில் செயலியை சிறப்பாக செயல்படுத்துவதற்கு அனைவரின் ஆலோசனைகளையும் எதிர்பார்க்கிறோம்.

அதேபோல் பக்தர்களின் விருப்பப்படி 48 முதுநிலை திருக்கோயில்களின் பிரசாதங்களை அவர்களின் இல்லங்களுக்கே அஞ்சல் துறையின் மூலம் அனுப்பி வைக்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. திருச்செந்தூர் கோயிலின் பிரசாதம் காஷ்மீரில் இருப்பவர்களுக்கு சென்றடைகின்ற ஒரு நல்ல சூழ்நிலையை செயல்படுத்தி இருக்கின்றோம். தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் ஆட்சி ஏற்பட்ட பிறகு இது போன்ற எண்ணற்ற திட்டங்களை இந்து சமய அறநிலையத்துறை செயல்படுத்தி வருவது பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பையும், மகிழ்ச்சியும் பெற்றிருப்பதில் நாங்களும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

இந்தியா முழுவதும் உள்ளவர்கள் திருக்கோயில் பிரசாதங்களை பெறுவதற்கு பிரசாதத்திற்குரிய கட்டணம் மற்றும் அஞ்சல் தொகை மட்டுமே வசூலிக்கப்படும். எந்தெந்த திருக்கோயிலுக்கு எந்தெந்த பிரசாதங்கள் சிறப்போ அவை அனுப்பி வைக்கப்படும். அடுத்த கட்டமாக, 3 மாத காலத்திற்குள் உலகம் முழுவதும், திருக்கோயில் பிரசாதங்களை அனுப்பி வைக்கும் நடைமுறை செயல்படுத்தப்படும். இந்து சமய அறநிலையத்துறையின் வரலாற்றில் முதன்முறையாக இத்திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கின்றது. எங்களுடைய எண்ணங்களை அலுவலர்களுடன் ஆலோசித்து செயல்படுத்தி இருக்கின்றோம். திருக்கோயி ல்களுக்கு வழங்கும் நன்கொடைகளுக்கு 80ஜின் கீழ் வரிவிலக்கு பெறலாம்.

மேல்மலையனூர் அங்காளம்மன் திருக்கோயிலை பொறுத்தளவில் பரம்பரை அறங்காவலர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. துறையின் சார்பில் உதவி ஆணையரை நியமித்து இருக்கின்றோம். அது மட்டுமல்லாமல் மாதத்திற்கு ஒருமுறை கூடுதல் ஆணையர் நேரடியாக ஆய்வு செய்து வருகிறார். இத்திருக்கோயில் தொடர்பாக வரப்பெற்ற புகார்களை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்திருக்கின்றோம். திருச்செந்தூர் உட்பட அனைத்து திருக்கோயில்களிலும் கூடுதலாக கட்டணம் வசூலிக்கப்படுவதை முழுமையாக தடுக்கின்ற முயற்சிகளை இந்து சமய அறநிலையத் துறை எடுத்து வருகிறது.

சிதம்பரம் நடராஜர் திருக்கோயிலை பொறுத்தளவில் எங்களது ஒவ்வொரு அடியையும் நிதானமாக எடுத்து வைத்துக் கொண்டிருக்கின்றோம். நீதிமன்ற த்திற்கு செல்வதாக அக்கோயிலின் வழக்கறிஞர்கள் தெரிவித்துள்ளதால் அங்கு நம்முடைய நிலைப் பாட்டை எடுத்து சொல்லலாம் என்று காத்திருக்கிறோம். சிதம்பரம் நடராஜர் திருக்கோயிலைப் பொறுத்தளவில் அங்கு என்னென்ன முறைகேடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றனவோ இவைகளையெல்லாம் சேகரித்துக் கொண்டு வருகிறோம். உரிய நேரத்தில் நிச்சயமாக உறுதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

அறங்காவலர்கள் நியமனம் தொடர்பாக இந்து சமய அறநிலையத்துறையின் செயல்பாடுகளை உச்ச நீதிமன்றம் பாராட்டி உள்ளது. இதுபோன்று துறையின் ஒவ்வொரு நடவடிக்கைகளையும் நீதிமன்றங்களே பாராட்டுகின்ற அளவிற்கு எங்களுடைய செயல்பாடுகள் அமையும். அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் குறித்த வழக்கில் இந்து சமய அறநிலை யத்துறை மேல்முறையீடு செய்திருக்கிறது.

திருக்கோயில்களுக்கு வருகைதரும் முதியோர்கள், மாற்றுத்திறனாளிகள், கர்ப்பிணி பெண்கள், பாலூட்டும் தாய்மார்களுக்கு தனி வரிசை ஏற்படுத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டதின் அடிப்படையில் அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. முதற்கட்டமாக 48 முதுநிலை திருக்கோயில்களில் 3 மாத காலத்திற்குள் இவ்வசதி செயல்படுத்தப்படும். ஒரு சில திருக்கோயில்களில் மூலவர் அமைந்திருக்கின்ற இடங்களில் போதிய இட வசதி இல்லாததால் அவற்றில் எந்த வகையில் நடைமுறைப்படுத்தலாம் என திட்டமிட்டு கொண்டிருக்கின்றோம்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலர் டாக்டர் க.மணிவாசன்,11 இந்து 2 சமய 2 அறநிலையத் துறை1சிறப்பு1பணி8அலுவலர்1 ஜெ.குமர குருபரன்,2 ஆணையர் க.வீ.முரளீதரன், தமிழ்நாடு அஞ்சல் வட்டத்தின் இயக்குநர் (தலைமையிடம்) பி.ஆறுமுகம், இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர்கள் திருமதி ந.திருமகள், சி.ஹரிப்ரியா, திருமதி மா.கவிதா, இணை ஆணையர்கள் அர.சுதர்சன், பொ.ஜெயராமன், இரா.செந்தில் வேலவன், அஞ்சலக உதவி கண்காணிப்பாளர் (வணிக மேம்பாடு) திருமதி எஸ். கவிதா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மே 24 ஆம் தேதி நடைபெறுகிறது!

## காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம்24.05.2023புதன்கிழமைபிற்பகல் 3 மணியளவில் மறைமலைநகர், பொத்தேரியில் அமைந்துள்ள எஸ்.ஆர்.எம்.ஓட்டல் கூட்ட அரங்கில் மாவட்டக் கழக அவைத் தலைவர் த.துரைசாமி அவர்கள் தலைமையிலும் மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன்,எம்.எல்.ஏ., து.மூர்த்தி மற்றும் மாவட்ட பொருளாளர் வெ.விஸ்வநாதன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் மாவட்ட அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட கழகத்தினர் அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:** முத்தமிழறிஞர்கலைஞர்அவர்களின் நூற்றாண்டு தொடக்கவிழா
கழக வளர்ச்சிப் பணிகள்.

**அமைச்சர் தா.மோ.அன்பரசன்**
செயலாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.



கழக சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினரும் அண்ணா பல்கலைக்கழக ஆட்சிக் குழு உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், அண்ணா பல்கலைக்கழக மாணவர்களால் நடத்தப்படும் சுருதிலயா இசைக்குழுவின் இசை நிகழ்ச்சியைத் துவக்கிவைத்து உரையாற்றினார்.

### எழும்பூர் தெற்குப் பகுதி

## 58 அ வட்டக் கழகச் செயல்வீரர்கள் கூட்டம்

### வி.சுதாகர் - ரத்னா லோகேஸ்வரன் பங்கேற்பு

சென்னை, மே 19 -


சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதலின்படி நேற்று பெரம்பூரில் 58(அ) வட்டக் கழகக் கூட்டம் அவைத் தலைவர் வெ.மருதன் தலைமையில் நடைபெற்றது

இக்கூட்டத்தில் கழக தலைமை செயற்குழு உறுப்பினர் .கே.எஸ்.எம்..நாதன் , 58வது வார்டு மாமன்ற உறுப்பினர் இராஜேஸ்வரி ˙ரீதர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பகுதிச் செயலாளர் வி,. சுதாகர், தொகுதி தலைமை கழக பார்வையாளர் ரத்னா லோகேஷ்வரன் கலந்து கொண்டு சிறப்புறை யாற்றினர் . இதில் நிர்மலா தேவி, பகுதி கழக நிர்வாகிகள் எஸ். ரசூல், டி.வி.வேலு, எம்.மலர் மாறன், கே.அன்ன பூரணி, எஸ். ஜெகதீசன், மாவட்ட பிரதிநிதிகள்

ராஜதுரை, து.களரிமுத்து, ஆர்.ஸ்ரீதர்,மற்றும் முன்னாள் மாவட்ட பிரதிநிதி குபேரன், பகுதி துணை அமைப்பாளர் சின்னப்பென்னு,கழக பேச்சாளர் கோ.செல்வம், மற்றும் வட்ட நிர்வாகிகள் க.விஜயன், .சரளா, மற்றும் க.பன்னீர்செல்வம், பகுதி பிரதிநிதிகள். கிருஷ்ணமூர்த்தி, வி.தட்சணாமூர்த்தி, ல.முரளி, ச.குமார், கோ.ரவி, ஈ.ரவிசந்திரன், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர். ஆர்.பாபு(எ) சந்திரசேகரன். ஆகியோர் நன்றி கூறினர்.

# படி..படி! படி.. படி!



பழக்கமாக்கி வழக்கமாக்கிப்
பக்குவமாய் புத்தகத்தைத் தோய்ந்துபடி!
படிப்படியாய் நீ உயர
அடிப்படையே புத்தகம்தான் ஆழ்ந்துபடி!

நிழற்குடையாய் துணையிருக்கும்!
நினைக்கும்தோறும் சுவைகொடுக்கும்! நூலைப்படி!
நித்தம்ஒரு புத்தகம்படி!
நேரம்வாய்க்கும் போதிலெல்லாம் மூழ்கிப்படி!

படி.. படி! படி.. படி!

அண்டமெங்கும் சுற்றிவந்து மெய்சி லிர்க்கலாம்!
அறிஞர்களைக் கவிஞர்களைக் கைகு லுக்கலாம்!
கண்டுணர்ந்துப் படித்தவற்றை நீவ டிக்கலாம்!
காகிதப்பூ விதழ்களிலும் தேன்கு டிக்கலாம்!

நூலகத்துள் செல்லும்போது மனித னாகலாம்!
நுழைந்துவிட்டுத் திரும்பும்போது புனித னாகலாம்!
நாலடியும் இரண்டடியும் உரிமை யாகலாம்!
நன்னெறியைச் சட்டமாக்கி உலகை ஆளலாம்!

ஏடுதோறும் அறிவுமணம் வீசி நிற்கலாம்!
எழுத்தாளன் மனசாட்சி பேசி நிற்கலாம்!
நாடும்வீடும் கல்விமலர் பூத்தி ருக்கலாம்!
ஞாலம்உன்றன் ஆணைகேட்டுக் காத்தி ருக்கலாம்!

ஆறு, கடல், மலை,விண்ணும் தோள்கொ டுக்கலாம்!
அன்றாடம் உன்னுடைய நாள்சி றக்கலாம்!
பாறையிலும் கருணைஊற்று நீர்சு ரக்கலாம்!
பார்முழுக்கப் போர்ஒடுங்கும் சீர்நி றக்கலாம்!

கிருத்துவுக்கும் முன்பிறக்கச் சூல்பி டிக்கலாம்!
கீழடியின் காலத்தில்உன் கால்ப திக்கலாம்!
சரித்திரத்தின் பக்கங்களில் சங்க மிக்கலாம்!
சங்ககாலத் தமிழ்அவையில் பங்கெ டுக்கலாம்!

காரல்மார்க்ஸ், ஏங்கல்சும் சீராட்டலாம்!
காந்தியாரும், அம்பேத்கரும் பாராட்டலாம்!
ஊர்தாண்டித் திசைகள்உன்னைத் தாலாட்டலாம்!
உனக்கும்அந்தக் கார்க்கியின்"தாய்" பாலூட்டலாம்!

பெரியாரும் அண்ணாவும் உரையாடலாம்!
பெருந்தலைவர், கலைஞர்உன்றன் உறவாகலாம்!
வரலாற்றில் நீயும்ஒரு வரியாகலாம்!
வாழ்ந்தாய்நீ என்பதற்குப் பொருளாகலாம்!

படி.. படி! படி.. படி!



கவிச்சுடர்
**கவிதைப்பித்தன்.**